| O.S.No. 406/2021 | PW1 : திரு. செல்வன்<br>த/பெ. திரு. தொப்பளான் | 10-03-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>1–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. வழக்கு சொத்தின் சர்வே எண் ஞாபகமில்லை. அதன் விஸ்தீரனம் 12 சென்ட் ஆகும். அந்த 12 சென்ட் தற்போது கரம்பாக உள்ளது என்றால் சரிதான், தண்ணீர் இருக்கும் சமயத்தில் நான் பயிர் வைப்பேன். வழக்கு சொத்து எவ்வகையில் எனக்கு வந்தது என்றால் என் தந்தையிடமிருந்து பாகப்பிரிவினை மூலமாக வந்தது. மொத்தம் 4 பங்கில் எனக்கு 12 சென்ட் பங்கானது பாகமாக வந்தது, அது A ஷெட்யூலா, B ஷெட்யூலா, C ஷெட்யூலா என்று ஞாபகமில்லை.

2. அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் ஜக்பந்தி போட்டுள்ளதா என்றால் போட்டுள்ளது. ராஜமாணிக்கம் நிலத்திற்கு கிழக்கு, முருகன் நிலத்திற்கு மேற்கு, பூங்காவனம் நிலத்திற்கு வடக்கு, ராஜேந்திரன் நிலத்திற்கு தெற்கு ஆகும். மேற்படி 4 எல்லைகள்தான் பாகப்பிரிவினை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதே ஜக்பந்தியைத்தான் எனது வழக்கு சொத்து விவரத்திலும் குறிப்பிட்டுள்ளேன்.

3. வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தில் 12 சென்ட்டிற்கு 4 எல்லைகள் எழுதப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தில் ஜக்பந்தி குறிப்பிடாத நிலையில் தவறுதலாக நானே ஒரு 4 எல்லைகளை குறிப்பிட்டு இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து விவரத்தில் தெற்கு என்ற 4 எல்லையை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது வழக்கு சொத்து விவரத்தில் சொல்லியுள்ள சின்ன ஏரிக்கு (தாங்கல்) கிழக்கு என்று சொல்லியிருந்தால் தவறு, ஆனால் ராஜாமாணிக்கத்திற்கு கிழக்கு என்பதுதான் சரி.

4. வா.சா.ஆ.3 மாதிரி வரைபடத்தில் ராஜமாணிக்கத்திற்கு கிழக்கு என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும், ராஜாமாணிக்கம் நிலம் எங்கு உள்ளது என்றும் காட்டவில்லை என்றாலும் சரிதான். என்னுடைய நிலத்திற்கும் சின்ன ஏரி (தாங்கல்)க்கும் இடையே ரோடு உள்ளது என்றால் இல்லை. அந்த சாலை செங்கம்பூண்டிக்கு செல்லும் சாலை என்று சொன்னால் சரியல்ல, அந்த சாலைக்கும் என்னுடைய சொத்திற்கும் 1 கிலோ மீட்டர் தூரம் இருக்கும், அந்த சாலை சித்தாத்தூர் அம்மன் கோவிலுக்கு செல்லும் சாலை ஆகும்.

5. செங்கம்பூண்டி மேல்குவளை சாலை அமைத்து சுமார் 55 ஆண்டுகளுக்கு மேல் இருக்கும். அந்த சாலை சித்தாத்தூர் அம்மன் கோவிலுக்கு செல்லும் சாலை இல்லை என்றால் சரியல்ல. மேற்படி சாலைக்கு கீழண்டை பக்கம்தான் தாவா சொத்து உள்ளது என்றால் சரியல்ல, அந்த சாலைக்கும் வழக்கு சொத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை. மேற்படி சாலையைத்தான் தற்போது தார் சாலையாக போட முயற்சி செய்து வருகிறார்கள் என்றால் சரிதான், அதைத்தான் நாங்கள் போடாமல் தடை செய்துள்ளோம். மேற்படி சாலை என்னுடைய சொத்திற்கும் அந்த சாலைக்கும் 1 கிலோ மீட்டர் தூரம் உள்ள நிலையில் எதற்காக ஆட்சேபணை செய்தோம் என்றால் அந்த சாலையை பொருத்து நான் எந்த ஆட்சேபணையும் செய்யவில்லை.

6. தாவா சொத்தான 12 சென்ட் நிலத்தினை சுற்றி எங்கும் சாலை இல்லை என்றால் சரிதான். அவ்வாறு எனது நிலத்தை சுற்றி சாலை இல்லாத நிலையில் எதற்காக இவ்வழக்கினை போட்டுள்ளீர்கள் என்றால் புதியதாக சாலை உருவாக்க நினைத்தார்கள், அதனால் போட்டேன். அந்த சாலை எங்கு செல்வதற்காக போடப்படுகிறது என்றால் என்னுடைய

நிலத்திலிருந்து செங்கம்பூண்டிக்கு செல்வதற்காக போடப்படுகிறது. மேற்படி விஷயத்தை தாவாவில் சொல்லியுள்ளீர்களா என்றால் சொல்லியுள்ளேன். செங்கம்பூண்டி மேல்குவளை சாலையானது சின்ன ஏரி (தாங்கல்)–ன் கிழக்கு பக்கம் செல்கிறது என்றால் இல்லை. என்னுடைய நிலம் மற்றும் ரோடு எங்கு உள்ளது என்பதனை காண்பிப்பதற்கு ஆணையரை நியமனம் செய்ய வேண்டி மனு தாக்கல் செய்ய தயாராக உள்ளீர்களா என்றால் தயாராக உள்ளேன்.

(1–ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கா வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது. )

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்/– M. விக்னேஷ் பிரபு
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**